# தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்களின் சமூகத்தாக்கம்: கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு


**Supervisor**
*Dr. MA. Mohamed Ramees,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. NKF. Samrose,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*



காலாகாலமாக ஊடகங்களின் வருகையினால் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இன்று பல்வேறு வடிவங்களில் ஊடகம் மனித சமூகத்தை ஆட்கொண்டு வருகின்றது. இதனடிப்படையில் தொலைக்காட்சி குறித்து பேசுகின்ற போது இலங்கை மற்றும் தென்னிந்திய இயக்கத் திரைகளை நாம் குறிப்பிட முடியும். அதிலும் குறிப்பாக தென்னிந்திய திரைகள் இன்றைய ஊடகங்கள் வாயிலாக அனைத்து சமூகங்களிலும் ஆதிக்கம் செலுத்துவதனை மறுக்க முடியாதுள்ளது. அந்தவகையில் தொலைக்காட்சியில் வெளியிடப்படும் தொடர் நாடகங்கள் மக்களின் வாழ்வியலோடு பிண்ணிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றது. இன்று மக்கள் குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்துவதை விட சின்னத்திரைக்காக திட்டமிட்ட அடிப்படையில் தங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர். அந்தளவிற்கு சின்னத்திரைக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். இக் கலாசாரம் மக்களின் வாழ்வில் கலந்துவிட்டது எவ்வாறு உண்மையோ, அவ்வாறே அது அவர்களின் பண்பாட்டையும், நேரத்தையும் சிதைத்து விட்டதும் மறுக்க முடியாத உண்மையாகும். இத் தொடர்நாடகங்கள் முஸ்லிம் மக்களின் வாழ்வின் அஸ்திவாரத்தை ஆட்டம் காணச் செய்துள்ளதுடன் இன்று பாமரர், படித்தவர், சிறியவர், பெரியவர், மதத் தலைவர் போன்ற அனைத்து தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்ட பொழுது போக்கு அம்சமாக பாரிய செல்வாக்குடன் உலா வருகின்றது. (ஹபீப் முஹம்மது : 2002) குறிப்பாக சின்னத்திரையானது தற்காலத் தலைமுறையின் எதிர்கால கல்வி முன்னேற்றத்திற்கும், கலாசார மேம்பாட்டிற்கும் பாரிய சவாலாக அமைகிறது. எனவே இவ்வாய்வானது தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்களின் சமூகத் தாக்கம் எனும் தலைப்பில் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய நவீன சமூகம் பொழுது போக்கு அம்சமாக தொலைக்காட்சியினையும் பயன்படுத்தி வருகின்றது. இவை பல்வேறு அடிப்படையிலும் மனித முன்னேற்றத்திற்கு தடையாக அமைவதோடு நேர, கால விரயத்தினையும் ஏற்படுத்துகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்கள் எத்தகைய இடத்தினை பிடித்துள்ளன அத்துடன் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்தல் ஆய்வுப் பிரச்சினையாகும். மேலும் தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்களினால் முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுகின்ற சமூகப்பிரச்சினைகளை அடையாளம் கண்டு கொள்ளல், தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்களால் ஏற்படும் சாதக, பாதக விளைவுகளை அடையாளம் கண்டு கொள்வதுடன் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்மொழிதல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை கொண்டுள்ளது. இவ்வாய்விற்கான தகவல்கள் பண்புரீதியான முறை (Qualitative method) மூலம் பெறப்படுவதோடு, முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதில்

இரண்டாம் நிலைத்தரவுகள் பிரதேச செயலகப் பதிவேடுகளில் இருந்தும், சஞ்சிகைகள், இணையத்தள தகவல்களிலிருந்தும் பெறப்படவுள்ளது. முதலாம் நிலை தரவில் வினாக்கொத்து (Questionnaire), பேட்டி காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக் குழுக்களுடனான கலந்துரையாடல் (Focus Group Discussion - FGD) போன்றவை அடங்குகின்றன. இதில் கல்முனை முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப எளிய எழுமாற்று முறை மூலம் 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இலக்குக்குழு கலந்துரையாடல் மூலமும் ஆய்வுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக சேகரிக்கப்படும் தகவலகள் SPSS, MS Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக இவ்வாய்வு தொலைக்காட்சித் தொடர்நாடகங்கள் நேரவிரயம் மட்டுமன்றி பல்வேறு பிரச்சினைகளையும் தோற்றுவிக்கிறது என உணரமுடியும்.

***Key words:*** தொலைக்காட்சி நாடகங்கள் (Tele Serials), சமூகப்பிரச்சினை (Social Problams), சமூக தாக்கம் (Social Impact)